## *29.* குகதேவு.

***கலிவிருத்தம்.****

**தி**ங்களணிநர் சேயோன் செம்பவளவை வாயால்
துங்கவிமல னார்பாற் சொன்னமுடிவு சேர்வார்
பங்கமொருவி மாணார் பாதநன்னிலை யார்வார்
சங்கரகுரு வேயா டாரககுக தேவே. 1

**மா**யமென்றம லாதி மாளவென்றுக லாதி
ஆயவம்புட னீட்டுன் னாரருளையு ணாட்டுந்
தூய சிந்தைய ருய்வார் தூணமின்றருள் செய்வாய்
தாயவந்தணர் கோவே தாரககுக தேவே. 2

**அ**ந்தகனடு வேலை யன்னியப்படும் யாவும்
இந்தமெய்யுள போதே யில்லெனத்தளி வாதே
உந்துறழ்வுகொ ளாதா ருன்றனைத்தொடர் வாரே
நந்தலிலிக ளானா நாப்புகழ்குக தேவே. 3

**இ**ட்டமுற்றுனை நாடார்க் கெட்டிவித்தினு மேலாம்
புட்டமுற்றுனை யன்பாற் போற்றுநர்க்கதி யின்பாம்
கட்டறுத்தெனை யாளாய் கட்சுரர்க்கொரு மேலாய்
நட்டவித்தக மோவா ஞாட்புடைக்குக தேவே. 4

**நி**ன்பரிவுடை யாரை நீள்சிறுமைகள் சாரா
வன்பரிவுக ணாடா மாமறவினை கூடா
என்புரிவரு ளேதா வேணருணிலை நாதா
அன்புடையவர் கோவே யாகமகுக தேவே. 5

---

* இவ்விருத்தத்தின் முதற்சீரையும் மூன்றாஞ்சீரையும் தேமா புளிமாவெனப் பிரிக்கின், அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தமுமாம்; ஒற்றொழித்து அலகிடுக; விதி, **திருவலங்கற்றிரட்டின்** இரண்டாங்கண்டத்தே காணலாம்.

1. **அணியுநர்** என்பது "அணிநர்" என மருவிற்று; **"மொழிநரு முளரே"** என்புழிப்போல (நன்னூல்).

2. **நீட்டல்** = கொடை; **சூ - நிகண்டு. தூணம்** = பகை; 'த்வேஷணம்' என்பதன் விகாரம்.

4. **புட்டம்** = நிறைவு; **டகரவெதுகை.**

**வீ**டுதந்தரு ளுன்னை மேவுகின்றவர் தம்மை
சாடுமந்தகர் சாரார் சாவினம்பழி சேரா
ஆடுகண்டக ரண்ணா ராயுதங்கடு நண்ணா
மாடுமண்டரு டாதா மங்களகுக தேவே. 6

**நா**வினன்மனு வோதி நாளுமன்புரு வாகிக்
கேவலந்தனை நூறிக் கீழ்ச்சலந்தனை மாறி
ஆவிகண்டருள் சேர்வா ராகமென்பது மேவார்
தாவிலின்பரு டாராய் தாரககுக தேவே. 7

**ச**க்கொளித்தக மூரித் தாமரைத்தவி சேறிச்
செக்கரவிரும் விண்போற் றேசுவிரியு முன்பால்
பொக்கமறவுள் ளாரே போதல்வரலு மேவார்
சொக்கமொடெனை யாளாய் சோபனகுக தேவே. 8

**ஐ**ந்தனுளொரு மூன்று மந்தரமுறக் கண்டு
சந்தியுடையி ரண்டுஞ் சங்கமமுறக் கொண்டு
மந்திரகதி சாரு மங்களவரெ லாரும்
எந்தைகளென வாவா ரென்பரகுக தேவே. 9

**கா**ணற்குரிய கண்ணாய்க் கண்ணற்கரிய விண்ணாய்
மாணற்புதவி ராட்டாய் மன்னுனைப்புகழ்ந் தோற்கோர்
நாணப்பரிவு போக்கா நன்னிலைக்கதி சேர்த்தாய்
ஆணப்பரிவு ளேனை யாண்டருள்குக தேவே. 10

---

9. **அந்தரம்** = முடிவு.

10. **புகழ்ந்தோன்** = திருப்புகழ்ப்பாக்களாற் றுதித்தோன் = அருணகிரிநாதன். **போக்கா** = போக்கி; செய்யா என்னும் வாய்ப்பாட்டிறந்தகால வினையெச்சம். இதனை, ஆவீற்றுடன்பாட்டு வினையெச்சமென்றும், உடன் பாட்டெச்ச மென்றும், உடன்பாட்டிறந்தகால வினையெச்ச மென்றுங் கூறுப. **ஆணப்பரிவு**= அன்பின்பம். **ஆணம்** = அன்பு; **சூ-நிகண்டு.**